Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 77

National Tamil Daily தேசிய தினசரி

(29 4-65)

விசுவாவசு சித்திரை 17 துல்ஹஜ் பிறை 26 வியாழக்கிழமை

## அமெரிக்க ஆயுத உபயோகம்
### ராஜாங்க இலாகா புகார்

வாஷிங்டன், ஏப். 28

பாகிஸ்தான் கட்ச் எல்லையில் அமெரிக்க டாங்கிகளையும், அமெரிக்க ஆயுதங்களையும் உபயோகித்துள்ளது பற்றி வாஷிங்டனிலுள்ள இந்தியத்தூதர் திரு. பி. கே. நேரு அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரியிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

கட்ச்சில் உபயோகிக்கப்பட்ட அமெரிக்க டாங்கிகளினதும், இதர ஆயுதங்களினதும் போட்டோ படங்களை இந்தியா டில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரிடம் சமர்ப்பித்திருப்பதையும், ராஜாங்க இலாகாவுக்கு இன்னும் அவை கிடைக்கவில்லை என்றும், இந்தப் படங்களை அமெரிக்க ராஜாங்க இலாகா இப்போது எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க பாகிஸ்தான் ராணுவ உதவி ஒப்பந்தத்தின் கீழ் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புக்கெதிராக மட்டுமின்றி, வேறெந்த நாட்டின் மீதும் அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்க முடியாது.

குறிப்பாக இந்தியா விஷயத்தில் அவற்றை உபயோகிப்பதிலிருந்து தடுக்க விசேஷ உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதானம், சண்டை இரண்டுக்கும் தயார்

## கட்சில் இன்னும் தாக்குதல் நீடிப்பதாக சாஸ்திரி அறிவிப்பு

### "பாகிஸ்தான் அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளது"

புதுடில்லி, ஏப். 28

கட்ச் பகுதியில் பாகிஸ்தான் அப்பட்டமான ஆக்கிரமிப்பை நடத்தியிருப்பதாயும், ஆயுதம்தாங்கிய இந்த வலுத்தாக்கலுக்கு மத்தியிலும் சண்டையை நிறுத்த இந்தியா தயார் என்றும், ஆனால் பாகிஸ்தான் கடந்த 13-ந் திகதி தானே தெரிவித்த சண்டை நிறுத்த யோசனையிலிருந்து பின்வாங்கிவிட்டதாயும் இந்தியப்பிரதமர் திரு. சாஸ்திரி இன்று லோகசபையில் பேசியபோது குறிப்பிட்டார்,

6 மைல்முதல் 8 மைல்வரை இந்திய பகுதிகளுள் ஊடுருவி இந்திய நிலைமீது அவர்கள் தாக்கிவருவதாயும், இருதரப்பாருக்குமிடையே கடும் கைகலப்புகள் நடந்திருக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

"எமது வீரர்கள் இணையற்ற பராக்கிரமத்துடன் எல்லையில் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள், மக்கள் அனைவரும் இந்த நெருக்கடியான தருணத்தில் அவர்களுக்குப் பின்னால் நிற்கிறார்கள் என்பதைக் கூறவிரும்புகிறேன்" என்றார் சாஸ்திரி.

"பாகிஸ்தானியர் மீண்டும் மீண்டும் தாக்கிவருகிறார்கள். கிழக்கு எல்லையிலும், மேற்கு எல்லையிலும் பல இடங்களில் கடந்த சில மாதங்களாகவே அவர்கள் இவ்வாறு தாக்குதல் நடத்தி வந்தார்கள். இன்னும் தாக்குதல் நீடிக்கிறது" என்றார் இந்தியப் பிரதமர்.

கட்ச் பகுதியில் எல்லை வரையறுக்கப்படவில்லையாயினும் நிலப்படங்களில் அவை தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தியா சமாதானத்துக்குத் தயார். ஆனால் நியாயமற்ற பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை முற்றாக எதிர்த்துநிற்போம் என்றும் அவர் கூறினார்.

கட்சிலுள்ள ரன் பகுதி எங்களுடையது. பாகிஸ்தானின் தாக்குதலுக்கு இந்தியா அது கொண்டுள்ள வெறுப்பைத் தவிர வேறு காரணமில்லை. ஆனால் இந்தியா தன் கடமையைப் பூரணமாகவும் தெளிவாகவும் நிறைவேற்றும். நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்பதை ராணுவம் தீர்மானிக்குமென்றார் சாஸ்திரி.

## இரத்த தானமளிக்க 20,000 பேர் தயார்

புதுடில்லி, ஏப். 28

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்ட சண்டையினால் காயமடைந்த இந்திய வீரர்களுக்கு சிகிச்சை அளிக்க குஜராத்தில் தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீரர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இரத்த தானம் அளிக்க 20,000க்கும் அதிகமான குஜராத் மக்கள் முன்வந்துள்ளனர்.

## 'சீன கற்றுக் கொடுத்த பாடம்'

புதுடில்லி, ஏப்ரல் 28

இந்திய லோகசபையில் இன்று நடைபெற்ற விவாதத்தில் திருமதி விஜயலட்சுமி பண்டிட் பேசுகையில், பாகிஸ்தானுக்கு சீனர்கள் நல்ல "பாடம்" சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள் என்றும் தாக்குதல் திட்டத்தை பாகிஸ்தானுக்கு சீனா உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்பது கட்ச்-ரான் தாக்குதல் தெளிவாகக் காட்டுகிறது என்றும் கூறினர்

---

## யாழ்: இந்துக்கல்லூரி 75-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 75-வது வருடப் பூர்த்திவிழா இன்று கல்லூரி மண்டபத்தில் விசேட பூஜைகளுடன் ஆரம்பமாகிறது நாவலரின் வழிநின்று சைவத்துக்கும், தமிழுக்கும் இக்கல்லூரி சேவை செய்து வருகிறது

## ஆனையிறவு 'வெங்காய' தடையை நீக்கவேண்டும்

### வவனியா மாவட்ட இணைப்புக் குழு கோரிக்கை

வவனியா, புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து வவனியாவுக்கு வெங்காயம் கொண்டு வருவதற்கு ஆனையிறவுத் தடையை அகற்றவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை நேற்று முன்தினம் வவனியா கச்சேரியில் நடைபெற்ற வவனியா மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியது.

வவனியா அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், கிராமச்சபைத் தலைவர்கள், நகரசபைத் தலைவர் உட்பட பலரும் சமூகமளித்திருந்தனர்.

வவனியா மாவட்டத்தில் வெங்காயத்துக்கு ஏற்படும் தட்டுப்பாட்டையும் இதனை நீக்குவதற்கு ஆனையிறவுத் தடை காரணமாகவிருப்பதை வவனியா எம். பி. திரு. ரி சிவசிதம்பரம் விளக்கமாக எடுத்துக் கூறினார். யாழ்ப்பாணத்திலிருந்து வவனியாவுக்கு வெங்காயத்தை தாராளமாகக் கொண்டு வருவதற்கு ஆனையிறவுத் தடையை நீக்க வேண்டுமென்ற யோசனையை வவனியா அரசாங்க அதிபர் ஏற்றுக்கொண்டார். இதுபற்றி அரசாங்கத்துக்கு தெரிவிப்பதென்றும் அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து இது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்வதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வவனியா மாவட்டத்திலும் ... [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

செனட்டில்

## 'ஒப்பந்த விபரங்களை தெரிவிக்க வேண்டும்'

### தவறினால் பாரதூரமான விளைவு ஏற்படும் என்கிறார் எதிர்க்கட்சி அங்கத்தவர்

கொழும்பு, புதன்

'யு. என். பி சமஷ்டிக் கட்சியினருடன் செய்துகொண்ட ஒப்பந்தம் என்னவென்பதை நாட்டு மக்களுக்கு தெளிவாக அறிவிக்கப்படவேண்டும். இந்த ஒப்பந்தம் சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் சாதகமாக அமைந்துள்ளதா என்பது பற்றி மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் மக்களை ஏமாற்றிவிட முடியாது"

இவ்வாறு இன்று செனட் சபையில் எதிர்க்கட்சி அங்கத்தவர் செனட்டர் ஆனந்ததிசநாயக்கா சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதத்தில் பேசுகையில் தெரிவித்தார்

திரு. திசநாயக்கா மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசாங்கம் எவ்வித ரீதியில் இயங்கப்போகிறது என்பதை அது தெரிவிக்கவேண்டும்.

சில குறிப்பிட்ட பிரதேசங்களில் தமிழ் மொழியே நிர்வாகமொழியாக இருக்குமென தமிழரசுக்கட்சியாருடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த ஒப்பந்தம் என்ன என்பது பற்றி தெளிவாக்கப்படாவிடில் அதன் விளைவு பாரதூரமாக இருக்கும்.

1961-ம் வருடத்தில் யு என். பியினர் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் ஒரு அங்குல நிலமாகுதல் சமஷ்டிக்கட்சியினருக்கு கொடுத்துவிட முடியாது எனத் தெரிவித்திருந்தனர். ஆனால் இப்போது அதே கட்சியுடன் சேர்ந்துள்ளனர். இது நாட்டுக்கு ஒரு பயமுறுத்தலாக இருக்கும்.

யு என் பி. தமிழ்க்காங்கிரசுடனும் சேர்ந்துள்ளது. ஐம்பதுக்கு ஐம்பதையும் தமிழரசுக்கட்சி எந்தக் கொள்கை கொண்டிருக்கிறதோ அந்தக் கொள்கையையும் தான் ஆதரிக்கவில்லை என்பதையும் யு. என். பி வெளிப்படையாகக் கூறுவதற்கு எதற்காகத் தயங்குகிறது, அஞ்சுகிறது? குறிக்கப்பட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டு ஒன்று எந்த நேரத்தில் வெடிக்கும் எனத் தெரியாத நிலையில் இப்போது சூழ்நிலை இருக்கிறது.

யு. என். பி. ஆட்சியிலிருந்தபோது தான் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

இலங்கை - இந்தியர் பிரச்னை பற்றி அரசாங்கம் ஒன்றும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை; இந்த அரசாங்கம் தோல்வியில் முடியும் என நான் கூறுவேன்.

## சில மந்திரிகளுக்கு அரசாங்க கார்கள்

கொழும்பு, புதன்

அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள கார்கள் சிலவற்றை சில மந்திரிகளுடைய உத்தியோக காரியங்களுக்காக உபயோகிக்கப்படுவதற்காக அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

உணவு,விவசாய மந்திரி திரு எம் டி. பண்டா, உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யு. தகநாயகா, நிதிமந்திரி யு. பீ. வன்னிநாயக்கா, போக்குவரத்து மந்திரி திரு. இ. எல். பி. குருனே ஆகியோரே சொந்தத்தில் கார் வைத்திராதவர்கள் இவர்களது உத்தியோக பாவிப்புக்காக அரசாங்க கார்கள் வழங்கப்படும்,

இவர்கள் உல்லாச கார்களை உபயோகிக்கமாட்டார்கள்.

## சமசமாஜ கம்யூனிஸ்ட் கூட்டு மேதினம்

இடம்: பழைய பூங்கா [illegible] யாழ்ப்பாணம்.

காலம்: 1-5-65 சனிக்கிழமை மாலை 5-30 மணி.

தலைவர் S நாகராசா M M C.

பிரதம பேச்சாளர்கள்:

டொறிக் டி சூசா செனற்றர்

H G S ரத்தினவீர M M C

ஊர்வலம் மாலை 3 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலிருந்து ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கிராமவாசிகளுக்கு வேலை கிடைக்குமாறு செய்வதற்கு உரிய வழி இயந்திர மயமாக்குவதல்ல. அதற்குப் பதிலாக இதுவரை நாம் செய்து வந்த கைத்தொழில்களை மீண்டும் புனருத்தாரணம் செய்வதுதான்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna. 'EELA NADU' Jaffna Phone 789.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 17 உ (29-4-65)


## மந்திரி கூட்டும் மகாநாடு

சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களுக்கும் எவ்விதம் நிரந்தரமான துரிதமான நிவாரண உதவி யளிக்கலாமென்பதை ஆராய்வதற்கு சமூகசேவைகள் மந்திரி நாளை அரசாங்க அதிபர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டவிருக்கிறார். இம்மகாநாடு நல்ல முடிவுகளைச்செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

சூறாவளி ஒரு இரவில்தான் வீசியதென்றாலும் அதன் விளைவுகள் அனந்தம். சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலையைப்பற்றி நாம் பலதடவைகளில் இப்பத்தியில் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறோம். பொது ஸ்தாபனங்கள் பல உடனடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை முதலியவைகளை அனுப்பி உதவின. அவை பெரும்பாலும் உதவி தேவையானவர்களின் கைகளில் கிடைக்கவில்லை யென்று பொதுவாகத் தெரிவிக்கப்பட்டது. தேவையானவர்களுக்குக் கிடைத்திருந்தாலும்கூட அவை எத்தனை நாட்களுக்குப் போதும்? அரசாங்கமும் ஏதோ உதவி செய்தது. அந்த உதவி ஒரு குடும்பத்துக்கு ஒரு நேரத்துக்குக்கூடப் போதுமா என்பது பொதுமக்கள் விடுத்த கோரிக்கைகளிலிருந்தும் நாம் இங்கு அடிக்கடி சுட்டிக்காட்டியவைகளிலிருந்தும் தெளிவாகின. அரசாங்கம் அளித்த சிறு உதவிகளும் பொது மக்களும் பொதுஸ்தாபனங்களும் அளித்த உதவிகளும் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதாதென்ற சமயத்தில் தான் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தினர் 'இனி உதவி தேவையில்லை' என்று தெரிவித்திருந்தனர். இதற்கு செஞ்சிலுவைச்சங்கக் கொழும்புக் கிளையே உடனடியாக பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

நாளை சமூகசேவை மந்திரி கூட்டும் அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் உண்மை நிலவரங்களை அரசாங்க அதிபர்களின் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக் காட்டுவார்களென எதிர்பார்க்கலாம். இடிந்த, அழிந்த வீடுகளுக்கும், பயிர்ச்செய்கைகள் அழிந்ததால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்குவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான நிவாரண வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய அவசியம்பற்றி யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மாவட்டங்களின் இணைப்புக்குழுக்கள் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களை நாளைய மகாநாடு ஆராய்வதில் கஷ்டமிருக்காது.

இடிந்தவீடுகளையும், அழிந்த குடிசைகளையும் 'ஒட்டு, வெட்டு' வேலைகள் மூலம் திருத்திக்கொடுக்க நடவடிக்கையெடுத்தால் போதுமென்ற மனப்பான்மை சிலரிடம் நிலவியது. குடிசைகளை இழந்தவர்கள் நல்ல வீடுகளில் வசிக்க உதவி செய்வது பாவமா? சூறாவளியினால் கடலுக்குப் பலியான மீனவர்களின் குடும்பங்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய வகையில் அக்குடும்பங்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நீண்டகாலத் திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். இவைகள்பற்றி நாளை மகாநாடு ஒரு நல்ல முடிவுசெய்து விரைவில் அவற்றைச் செயல்படுத்த வேண்டும்.

# கட்ச் பகுதியும் இந்தோ-பாகிஸ்தான் கைகலப்பும்

இந்தியா—பாகிஸ்தானுக்கிடையே கட்ச் எல்லையில் பெரும் மோதல் ஏற்பட்டிருக்கிறது. இருநாடுகளும் பொது படை திரட்டலில் இறங்கியிருப்பதாய் செய்திகள் கூறுகின்றன. இருபகுதி துருப்புக்களும் ஏற்கனவே மோதிக்கொண்டதில் குறிப்பிடத்தக்க அளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது.

குஜராத் ராஜியத்திலுள்ள கட்ச் பகுதியில்தான் சமீபத்தில் சண்டை நடைபெற்ற கஞ்சர்கோட், ரன் ஆகிய பிரதேசங்கள் இருக்கின்றன. இப்பகுதி மேற்கு பாகிஸ்தானையும் இந்தியாவையும் பிரிக்கிறது. இரு நாடுகளின் எல்லையைப் பிரிக்கும் ரன் பகுதியில் 10 சதுரமைல் பிரதேசத்தின் உரிமைபற்றி தற்போது குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியின் சீதோஷ்ண நிலை விசித்திரமானது. கோடை காலத்தில் வரண்ட பாலைவனமாகவும், ஆண்டுதோறும் மே மாதம் மத்திவாக்கில் உலகில் மிக மோசமான சதுப்பு நிலமாகவும் அது இருக்கும். ஏப்ரல் 9-ம் திகதி இப்பகுதியில் முதலாவது சம்பவம் நடைபெற்றது. இந்தியா இப்பகுதியில் துருப்புக்களை பலப்படுத்தி தமது பகுதிமீது தாக்கியதாய் பாகிஸ்தான் புகார் கூறுகிறது. இந்தியத் துருப்புக்கள் ஊடுருவல் செய்து பாகிஸ்தான் எல்லை நிலையங்களைத் தாக்கியதாகவும் பாகிஸ்தான் கூறுகிறது. ரன் பகுதியிலுள்ள கஞ்சர்கோட் இந்தியாவின் பகுதியாக உள்ளது என்ற இந்தியக் கோரிக்கையை பாகிஸ்தான் ஏற்கமறுக்கிறது. தகராறுக்கிடமான இப்பிரதேசம் ராஜஸ்தான் கடல் எல்லை பிரிவிலிருந்து 24-வது அட்சரேகைக்கருகே 50 மைல் அகலத்தில் அமைந்திருப்பதாயும், எனவே கட்ச் பகுதியிலுள்ள 3500 சதுரமைல் தனக்குச் சேர வேண்டும் என்று பாகிஸ்தான் உரிமை கொண்டாடுகிறது. 24 வது அச்சரேகைக்கப்பால் இந்திய துருப்புக்கள் வாபஸ்பெறவேண்டும் என்றும் அது கோருகிறது.

இந்தியா இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. ஏப்ரல் 9-ம் திகதி பாகிஸ்தானிய படையினர்தான் இந்திய எல்லை பொலிசார்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாயும், சட்டவிரோதமாக இரு எல்லைக் காவல் நிலையங்களை நிறுவியிருப்பதாயும் இந்தியா கூறுகிறது. பாதுகாப்பு சபைக்கும் அதுபுகார் தெரிவித்திருக்கிறது.

இருநாடுகளுக்கு மிடையே யுத்தநிறுத்தம் சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்தவேண்டுமென்ற யோசனை இதுவரை வெற்றி அளிக்கவில்லை.

இரு நாடுகளுக்கு மிடையேயான மோதலுக்கு தேசிய கௌரவத்தைத்தவிர வேறு காரணம் எதுவுமில்லை எனச் சிலர் கருதுகிறார்கள். இந்தியாவுக்கு மேற்குநாடுகள் ஆயுத உதவி அளிப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த மோதல் ஏற்பட்டிருக்கிறது என வேறுசிலர் கருதுகிறார்கள்.

கட்சிலுள்ள ரன் பகுதியில் இப்போது எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது பாகிஸ்தானின் பிரதேச உரிமைக் கோரிக்கைக்கு மற்றோர் காரணம் எனவும் கூறப்படுகிறது. இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையே வரையறுக்கப்படாத எல்லைகள் ஆயிரக்கணக்கான மைல் தூரத்துக்கு இருக்கின்றன. கிழக்கு—மேற்கு பாகிஸ்தான் ஆகிய இருஎல்லைகளிலும் ஏராளமான எல்லைகளில் சர்வே வேலை இன்னும் பூர்த்திசெய்யப்படவில்லை.

இரு நாடுகளின் தகராறில் சீனா எவ்வளவு தூரம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது இன்னும் ஊர்ஜிதமாகாத ஒருவிஷயமாயிருக்கிறது. எதுவாயினும் இரு நாடுகளும் முன்பு ஒரே நாடாக இருந்து இரண்டாகப் பிரிந்தவை. எனவே இப்போது நடைபெறும் சகோதரச் சண்டை நீண்டகாலம் இடம்பெறுவது அனைவருக்கும் வருத்தத்தையே அளிக்கும். இந்தக் கைகலப்பு நிற்கவேண்டுமென பல நாடுகள் வற்புறுத்தியிருக்கின்றன.

கட்ச் எல்லைச் சம்பவம் எதிர்காலத்தில் எப்படி உருவாகப்போகிறதென்பது பலரது சிரத்தையைக் கவர்ந்திருக்கிறது.

'நமது அலுவலகநிருபர்'

# சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாடு

## ஏப்ரலில் மலாயாவில் நடைபெறும்

கோலாலம்பூர், ஏப்ரல் 28

சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக் கழகம் நடாத்தும் மகாநாடும், கருத்தரங்கமும் கோலாலம்பூரிலுள்ள மலாயா சர்வகலாசாலையில் 1966ம் ஆண்டு ஏப்ரல் 17ந் தேதி தொடக்கம் 23ந் தேதிவரை நடைபெறுமெனத் தெரியவருகிறது.

இந்த மகாநாட்டிலும் கருத்தரங்கத்திலும் பங்குபற்றுபவர்கள் இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்திற்குள் விபரங்களை அமைப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கும்படி செயலாளர் விடுத்த சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியம், விமர்சனம், உளவியல், வரலாறு, சாத்திரம், தென்கிழக்காசியப் பண்பாடு, மொழிவளர்ச்சி, தமிழ் நூல்களை வேற்றுமொழிகளில் மொழிபெயர்ப்பது ஆகிய பகுதிகளிலுள்ள பல்வேறு அம்சங்கள் பற்றி மகாநாட்டில் ஆராயப்படும். இம்மகாநாட்டில் கல்வி ஸ்தாபனங்கள், கலாச்சார ஸ்தாபனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த குறிப்பிட்ட தொகையினோர் மட்டுமே அனுமதிக்கப்படுவரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாநாடு ஆங்கிலத்திலேயே நடைபெறும். கருத்தரங்கில் வாசிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகளும் ஆங்கிலத்திலேயே இருக்கும்.

மகாநாட்டு அமைப்புக் குழுவின் தலைவராக மலேசிய மந்திரி திரு. வி. ரி. சம்பந்தனும், உபதலைவராக தனிநாயக அடிகளும், காரியதரிசியாக வி. செல்வநாயகமும் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மகாநாட்டை மலாயா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சர்வதேச தமிழாராய்ச்சிக்கழகமும், இந்திய பாடசாலைகளின் தேசிய கல்வி அபிவிருத்திச் சபையும் சேர்ந்துநடத்துகின்றன. மகாநாட்டில் இந்தியா மலாயா இலங்கை பர்மா லண்டன், செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் தமிழ்ப் பேராசிரியர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வர்.

சிம்மாசனப்பிரசங்கத்திற்கு

# நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது செனட்டில் விவாதம்

பம்பலப்பிட்டி, புதன்

'இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட திருப்பம் "என்னவென்றால் சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மந்திரியாக நியமிக்கப்பட்டது தான்" என நேற்றுப் பிற்பகல் செனட்சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து உரையாற்றிய செனட்டர் ரெஜி பெரேரா கூறினர்.

செனட் சபைத் தலைவர் திரு. தோமஸ் அமரசூரியா தலைமையில் நேற்றுப் பிற்பகல் செனட்சபை கூடிய பொழுது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது செனட்டர் ரெஜி பெரேரா பேசுகையில்

"1948ம் ஆண்டுதொடக்கம் ஐக்கியதேசியக் கட்சி நடத்திய ஆட்சிபற்றி எல்லாருக்கும் நன்றாக விளக்கும். அவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தபோதிலும் பொதுமக்களுக்காக ஒரு நன்மையும் செய்யவில்லை.

ஜனநாயகத்தை இந்த நாட்டில் பாதுகாப்போம் என்று இன்று இக்கட்சி கூறுகிறது. ஐக்கியதேசியக் கட்சியின்காலத்தில் துறைமுகம் அன்னியர் கையிலிருந்து மேலும் இறக்குமதி செய்யும் அத்தியாவசியமான பொருட்களும் தனியார் துறையிலேயே இறக்குமதி செய்யப்பட்டன. இவர்களின் ஆட்சிக்காலத்தில் எல்லாபொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இ.போ. சபைக்கு மீண்டும் திரு. ஆர். சி. டி. சில்வாவைத் தலைவராக நியமித்துள்ளது. திருமதி பண்டாரநாயக்கா பதவிக்கு வந்ததும் சில்வாவை அப்பதவியினின்றும் நீக்கினர்.

திரு. திருச்செல்வம் சபையில் இருப்பதால் எனது பேச்சை ஆங்கிலத்திலும் பேசுகிறேன்" என்று கூறி திரு. பெரேரா ஆங்கிலத்தில் தொடர்ந்து பேசினர்.

# 900 மைல் சைக்கிள் பிரயாணம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் டெக்னிகல் தொழில் நுட்பக் கல்லூரியில் மோட்டார் பொறிமுறை வகுப்பில் கல்வி பயின்றுகொண்டிருக்கும் 18 வயது நிரம்பிய இரு மாணவர்கள் சென்ற இரு வாரங்களாக சைக்கிளில் இலங்கையைச் சுற்றிப்பார்வையிட்டனர். வலைஞர்மடத்தைச் சேர்ந்த ராதகிருஷ்ண பிரசாத் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த எஸ். கணேஷ் ஆகிய இருவரும் இம்மாதம் 10-ந் திகதி இலங்கையை சுற்றிப் பார்வையிடவென யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டனர். இவர்கள் இலங்கையின் முக்கிய நகரங்கள் பலவற்றுக்கு விஜயம் செய்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்திற்கும் அங்கிருந்து குருநாகலுக்கும் சென்று பின்னர் கொழும்பு சென்றடைந்தனர். கொழும்பிலிருந்து காலிக்கு சென்று திரும்பவும் கொழும்பு சென்றடைந்தனர். இதன்பின்னர் கொழும்பிலிருந்து கம்பளைக்குச் சென்று அங்கிருந்து கண்டிக்கும், கண்டியிலிருந்து தம்புல்லைக்கும் சென்றனர். தம்புல்லையிலிருந்து அநுராதபுரம் வந்தடைந்து அங்கிருந்து நேற்றுக்காலை சுமார் 11 மணியளவில் 'ஈழநாடு' காரியாலயத்தை வந்தடைந்தனர்.

கடந்த இருவாரங்களுக்கு மேலாக சுமார் 900 மைல்களை பிரயாணம் செய்தபொழுதிலும் இவ்விளைஞர்கள் மிகவும் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டனர்.

## பழையமாணவர் சங்கம்

உடுப்பிட்டி, புதன்

வதிரிதேவரையாளி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம் அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. எம். எஸ். சீனித்தம்பி, துணைத்தலைவர்கள் திருவாளர்கள்: ஏ. எம். வடிவேல், ஏ. தம்பையா, சி. சச்சிதானந்தன். இணைச் செயலாளர்கள். திரு. ஏ. இரத்தினசபாதி, திரு. எஸ். கே. இராசேந்திரன். பொருளாளர் திரு. ஏ. டி. போல், கணக்குப் பரிசோதகர் திரு. வி. தர்மலிங்கம், நிர்வாகசபை உத்தியோகத்தர்களாகத் திருவாளர்கள்: ஏ. வி. பாலசிங்கம், எஸ். கணேசன், வி. மகேஸ்வரன், எம். செல்லத்தம்பி, கே. அருணாசல ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஆயுர்வேத ஆராய்ச்சி

பம்பலப்பிட்டி, வியாழன்

நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் பற்றி பரிசீலனை நடத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி சபை, இங்கு மிகக் குறைந்தளவு ஆராய்ச்சிகளே செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும், ஆராய்ச்சிக்கு ஏற்ற உபகரணங்களும், உரிய அதிகாரிகளும் பற்றாக்குறையுமே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடீஸ்வரர் பிர்லாவுக்கு 25 பைசா நன்கொடை!

## பானர்ஜி அனுப்பினார்

புதுடில்லி, ஏப். 28

பார்லிமெண்ட் உறுப்பினர் திரு. எஸ். எம். பானர்ஜி, சுதந்திரப்போராட்ட காலத்தில் இந்திய தொழிலதிபர்கள் காங்கிரசுக்கு கொடுத்த ரூ. 10 கோடி நன்கொடைக் கடனை தீர்க்கும் வகையில் தம்பங்காக 25 பைசாவை பெருந் தொழிலதிபர் திரு. ஜி. டி. பிர்லாவுக்கு மணி ஆர்டர் செய்துள்ளார்.

சென்ற சனிக்கிழமையன்று கல்கத்தாவில் திரு. பிர்லா ஒரு கூட்டத்தில் பேசிய போது, சுதந்திர போராட்ட காலத்தில் இந்தியத் தொழில் அதிபர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு ரூ 10 கோடி வரை உதவியிருப்பதாய்க் கூறினர்.

பத்திரிகைகளின் மூலமாக வெளிப்பட்ட விஷயத்தைத் தெரிந்து கொண்டபின்பு, சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களில் ஒருவன் என்ற முறையில் முதலாளிகளுக்குக் கடமைப் பட்டிருக்க நான் விரும்பவில்லை. ஆதலால் அப்பணத்தைத் திருப்பியளிக்கும் வகையில் என்பங்காக 25 பைசாவை அனுப்பியிருக்கிறேன்" என திரு. பானர்ஜி மணி ஆர்டர் கூப்பனில் எழுதியிருக்கிறார்.

பார்லிமெண்டிலுள்ள மற்றும் பல உறுப்பினர்கள் திரு. பிர்லாவுக்கு 25 பைசா மணி ஆர்டர்களை அனுப்பிவைப்பது பற்றி யோசித்து வருவதாகத் தெரிகிறது. ——

## எல்லோர் உதவியும் தேவை என்கிறார் மந்திரி

பம்பலப்பிட்டி, புதன்

அரசியல் சார்பு பற்றி தனக்குக் கவலையில்லையென்றும், தான் துறைமுகப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் வரை எல்லோருடைய உதவியையும் நாடுவதாகவும் சகல விஷயங்களிலும் பலரின் ஆலோசனைகளையும் தான் கேட்டுநடக்க எண்ணியிருப்பதாகவும் தேசிய சேவைப் பகுதி மந்திரி திரு வி. ஏ. சுகததாசா தெரிவித்துள்ளார். அவரைப் பல தொழிற்சங்கத் தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்திய போதே இவ்விதம் குறிப்பிட்டார்,

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை பட்டின சபைக் காரியதரிசியாக கடமையாற்றிய திரு. எஸ். சிவப்பிரகாசம் அடுத்த மாதம் தொடக்கம் வவுனியா நகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு திரு. எஸ். தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பட்டுள்ளார். ——

## வானொலி நிகழ்ச்சிகள் 29-4-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

பகல்: 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்மன்றம், 5-45 திரைப்பட இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சங்கீதவகுப்பு, 7-00 பேச்சு— 'டாக்டர் சுவாமிநாதஐயர்' ஏ. துரைரத்தினம், 7-15 வயலின், — மகேஸ்வரி நகுலேஸ்வரன், 7-45 நாடகம் 'லண்டன் கல்லையா' 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வயலின், 9-30 நேயர் விருப்பம், 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.

## சுழிபுரத்தில் வரவேற்பு

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ அமிர்தலிங்கத்துக்கும் அவருடைய பாரியாருக்கும் ஓர் வரவேற்பு வைபவம் சுழிபுரம் கிழக்கு மக்களால் அளிக்கப் பட்டது. சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றச் சங்க வாசிகசாலை மண்டபத்திலிருந்து மேளவாத்தியம் சகிதம் அமிர்தலிங்கம் தம்பதிகள் திறந்த மோட்டார் வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர். வீதியின் இருமருங்கிலும் பூரண கும்பங்கள் வைத்து மாலைகள் சூட்டப் பட்டன. கூட்ட மைதானத்தில் வாண வேடிக்கைகள் நடைபெற்றன. ஊர்வலம் ஐந்தரை மணிக்கு ஆரம்பமாகி இரவு பத்து மணியளவில் கூட்ட மைதானத்தை வந்து அடைந்தது. பின்னர் சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலைய முன்றலில் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு திரு. அ. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்ட பின்னர். திரு மு. சிவராசா, சி. சிவபாக்கியநாதன், சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம், க. சம்பந்தமூர்த்தி, மு ஆலாலசுந்தரம், க. கந்தசாமி, வி. கதிர்காமநாதன் உட்பட மற்றும் பலர் பேசினர். அமிர்தலிங்கம் பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.——

## பாடசாலையின் அபிவிருத்தி

பளை, புதன்

பச்சிலைப்பள்ளியில் மத்தியிலமைந்துள்ள பளை அரசினர் மகாவித்தியாலயம் கடந்த பத்தாண்டுகளாக ஏற்ற விஞ்ஞான ஆய்வுகூடங்களில்லாமையால் சிறந்த கல்வியைப் போதிக்கமுடியாத நிலையில் இருந்துவந்தது. இதனால் பல மூய மாணவர்கள் இப்பாடசாலையினால் குறித்த பயனை அடையமுடியாது போய்விட்டனர்.

தற்போது இப்பாடசாலையில் கடமையாற்றிவரும் பாடசாலை அதிபர் திரு. வி. செல்லையாவின் விடாமுயற்சியாலும் உதவியாசிரியர்களின் ஒத்துழைப்பினாலும் பாடசாலைக்கு ஒரு மண்டபம், விஞ்ஞான ஆய்வுகூடம். விவசாய ஆய்வு கூடம் ஆகிய கட்டிடங்கள் அமைய ஏதுவாகின. விவசாய ஆய்வுகூடத்தினதும், விஞ்ஞான ஆய்வுகூடத்தினதும் கட்டிட வேலைகள் ஓரளவு முடிவடைந்துவிட்டன இக்கட்டடங்கள் மிகவிரைவில் பாடசாலை உபயோகத்துக்குத் திறந்துவைக்கப்படவிருக்கின்றன.

அடுத்தபடியாக சௌசாலைக் கட்டிடம் அமைக்கப்பட வேண்டிய ஒழுங்குகள்யாவும் பூர்த்தியாகிவிட்டன.

## உதைபந்தாட்ட சாம்பியன்

வல்வெட்டித்துறை, புதன்

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இமையாணன் விளையாட்டுக் கழகம் "ஏ" பிரிவு சாம்பியனாகத் தெரிந்தெடுக்கப்பட்டது நவஜீவன்ஸ் 'பி' பிரிவுக் கழகம "பி" பிரிவு சம்பியனாகவும் உடுப்பிட்டி விளையாட்டுக் கழகம் 'சி' பிரிவு சாம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டன. சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கழகத்தினருக்கு உடுப்பிட்டி கிராமசபை தலைவர் ஆர். ஆர். திருமாவளவன் பரிசில்கள் வழங்கினார்.

## பிரதமரை அழைக்க கிராமசபை முடிவு

யாழ்ப்பாணம், வியா

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவையும் ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வத்தையும் வரவேற்று உபசாரம் ஒன்று நடத்துவதென சென்றவாரம் நடைபெற்ற கொக்குவில் கிராமசபைக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவி இலங்கைவாழ் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களிடையே மீண்டும் ஐக்கியத்தை ஏற்படுத்திய பிரதமமந்திரியை கண்டி கோண்டாவில் கொக்குவில் பொதுமக்கள் சார்பில் இச்சபை மிகவும் பாராட்டுகின்றது. அவருக்கும் அவருடைய தேசியஅரசாங்கத்திற்கும் நல்லாசி கூறுவதுடன் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குகின்றது. இச்சபை பிரதம மந்திரியை வரவேற்புஉபசாரத்துக்கு அழைக்கின்றது.

கோண்டாவில், கொக்குவில் பொதுமக்கள் சார்பில் இச்சபை உள்ளூராட்சி மந்திரியை மிகவும் பாராட்டுகின்றது. அவருக்கு நல்லாசி கூறுவதுடன் பூரணஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குகின்றது. அவரையும் வரவேற்புஉபசாரத்திற்கு அழைக்கின்றது. ——

## உல்லாசப்பிரயாணம் விரிவுபடுத்தப்படும்

பம்பலப்பிட்டி, புதன்

உல்லாசப் பிரயாணிகள் திணைக்களத்தை சிறந்த முறையில் அமைப்பதற்காக ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன இந்திய அரசாங்க உல்லாசப்பகுதி நிர்வாகியான திரு. எஸ். என், சிப்பை இலங்கைக்கு வருமாறு அழைத்துள்ளார். அவர் இலங்கை வந்ததும் உல்லாசபிரயாணங்கள் பற்றிய விரிவான ஒரு அறிக்கை ஒன்றை தயாரிப்பார் எனவும் தெரியவருகிறது.

அடுத்த மாத முதல்கிழமையில் இலங்கைக்கு வரவிருக்கும் திரு. சிப் கொழும்பு திட்டத்தின் கீழ்தான் ஆலோசகராக இலங்கைக்கு வருகின்றார். ——

## முதலாளிகளின் மோசடி

### பரிசோதகர்கள் நியமிக்கப்படுவர்

பம்பலப்பிட்டி, புதன்

அடுத்த வாரம் தொடக்கம் 50 வரிவசூலிக்கும் பரிசோதகர்கள் பெரிய ஸ்தாபனங்களுக்கும் கடைகளுக்கும் சென்று நானாந்த வியாபாரம் கணக்கு விபரங்கள், விற்பனை ரசீதுகள் முதலிய விபரங்களை பரிசோதனைசெய்வர், இதுபற்றி பரிசோதனை செய்வதற்காக சட்ட அதிகாரம் இவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்தில் ஈடுபாடுகாட்டும் பெரிய வர்த்தகர்கள் தங்கள் கணக்குகளை வருமான வரி பகுதியாருக்கு சரியான முறையிலும் உண்மையாகவும் காட்டாது, தங்கள் விருப்பப்படி கணக்குப்புத்தகங்களை தயாரிப்பதை நிறுத்துவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சில்லறை வியாபாரங்களிலும் பார்க்க, மொத்த வியாபாரிகளே வரி கொடுப்பதில் பல தில்லு முல்லுகளைக் கையாளுகின்றனர் என வருமானவரி அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். சில கடைகளில் இரண்டு புத்தகங்கள் இருந்தனவாம்.

## 'விவசாயத்தில் ஈடுபடவேண்டும்'

உடுப்பிட்டி புதன்

"விவசாயம் நாட்டின் முதுகெலும்பு எவரும் எந்தநேரத்திலும் செய்யக்கூடிய சுதந்திரமான தொழில் விவசாயம். படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்கள் கூட்டாகச்சேர்ந்து வெட்கமில்லாமல் விவசாயத்திலீடுபட்டால் தாமும் முன்னேறுவதுடன் நாட்டையும் முன்னேற்றியவர்களாவார்கள்" என்று பருத்தித்துறை பகுதி கிருஷிகர் போதனாசிரியர் திரு ரி. கே விமலேந்திரன் துன்னாலை தெற்கு வல்லுவன் இளம் விவசாயிகள் கழகத்தின ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினர்.

உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு மு. கணபதிப்பிள்ளை பேசுகையில், உருளைக்கிழங்கு. வெங்காயம் முதலியன வடமராட்சியில் கூடுதலாகப் பயிரிடவேண்டுமென்றும் வடமராட்சி மண் உருளைக்கிழங்குச் செய்கைக்கு மிகவும் உகந்தது என்பது ஆராய்ச்சியாளர் முடிவென்றும் விவசாயத்திலீடுபடும் இளைஞர்களை ஊரவர்கள் பாராட்டி அவர்களுக்குப் போதிய உற்சாகமும் உதவியும் அளிக்கவேண்டுமென்றும் கூறினர்.

இளம் விவசாயிகள் கழக பிரசாரக உத்தியோகத்தர் திரு சி. கனகசபை பேசுகையில் கமத்தொழிலின் அருமை இளைஞர்களுக்கு இப்போது தெரியாவிட்டாலும் வெகுவிரைவில் அனைவரும் விவசாயத்தை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றார்.

திரு. வே. சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்த இக்கூட்டத்தில் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. வே. சிதம்பரப்பிள்ளை, செயலாளர் திரு ஆ. கயிலாயநாதன், பொருளாளர் திரு வே. கணபதிப்பிள்ளை, இவர் கொண்ட நிர்வாகசபைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. வருகிற காலபோகத்தில் மிளகாய் வெங்காயம் முதலியன அதிகமாக பயிரிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## அப்பர் குருபூசை

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் நாவுக்கரசர் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. ஆலய வழிபாடு கூட்டுப்பிரார்த்தனையுடன் நடந்தேறிய குருபூசை முடிவில் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

## கிரிகெட் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

சண்டிலிப்பாய் கலைவாணி ஸ்போட்ஸ் கிளப்பிற்கும் சித்தங்கேணி கணேஸ் ஸ்போட்ஸ் கிளப்பிற்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட்போட்டி முடிவில் சண்டிலிப்பாய் கலைவாணி ஸ்போட்ஸ் கிளப்பினர் 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

கலைவாணி கிளப்பைச் சேர்ந்த ரி. தர்மசீலன் கூடிய ஓட்டங்கள் எடுத்தார்,

## நைஜீரியா செல்வர்

யாழ்ப்பாணம், வியா

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆசிரியர்களாக கடமைபுரிந்த திருவாளர்கள் எஸ். நாகேஸ்வரனும், கே. தம்பிப்பிள்ளையும் கிழக்கு நைஜீரியாவுக்கு செல்லவிருக்கின்றனர். இவர்கள் அங்கு ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவார்கள். ஏற்கனவே இவர்களுக்கு நைஜீரியா அரசாங்கம் நியமனங்களை வழங்கிவிட்டது.


## வரி விளம்பரம்

### தேவை

1-ம் திகதி தொடங்கி 15-ம் திகதி வரைக்கும் சென். ஜோன்ஸ் கலாசாலையில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சி விளம்பரகூடத்தில் வேலைசெய்வதற்கு திறமையான பெண்கள் தேவை. நேரில் வரவும். நவரட்னம் அன் கோ, 8, யும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம். 98

யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருக்கும் ஒரு அரிசி மில்லைக் குத்தகைக்கோ அல்லது பங்காகவோ நடாத்த ஆள் தேவை. விண்ணப்பிக்கவும்: வ. மகாலிங்கம், மில்லேன், மல்லாகம். 206

எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்குப் பெண்களும், ஓடர்கள் எடுப்பதற்கு அனுபவம் வாய்ந்த பிரதிநிதிகளும் தேவை. பெண்களுக்கு வாகன வசதியுண்டு. தகுந்த வேதனம் வழங்கப்படும் விண்ணப்பிக்க: மனேஜர், இலங்கா லபோறற்றரீஸ், உடுவில், சுன்னாகம், 211

### வகுப்புகள்

மத்திய எழுது வினைஞர்/ அப்போதிக்கரிபுகுமுகபரீட்சைகளுக்கு ஆரம்பிக்கும் மீட்டல் வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யுனிட்டெட் இன்ஸ்டிரியூட்ஸ், செல்வியடி, கரவெட்டி/107 பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 203

### அழைப்பு

தலைமை ஆசிரியர் (காலஞ்சென்ற) ஜேக்கப் நாகமணி முருகுப்பிள்ளை அவர்களின் ஸ்தோத்திர ஆராதனையும் ஞாபகார்த்த விழாவும் 1-5-65 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்ணி நற்று பரி. மத்தியாஸ் தேவாலயத்தில் நடைபெறும். அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். மேரி பொன்னுப்பிள்ளை J. M. செல்வத்துரை, J. M தேசரத்தினம், மனோன்மணி துரைராசா, S. M. தம்புத்துரை ஞானமணி நடராசா, கண்ணிநற்று. முன்னியவளை. 98

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இதழ். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### WANTED

1. Works Manager: Knowledge of Building construction, Estimating, Draughtmanship etc essential Salary to suit Qualification experience and ability

2 Administrative secretary:- With over ten years of Buisness Experience and Ability to satisfactorily correspond in English and Tamil Apply before 10-5-65 to the Advertising number: 210, Eelanadu, Jaffna 210


## மதுபோதையில் தனக்கே தீவைத்தார்!

பம்பலப்பிட்டி, புதன்

வெள்ளம்பிட்டியைச் சேர்ந்த கரோலிஸ் எனப்படுபவர் தன்மீது மண்ணெண்ணெயை ஊற்றி தனது துணிகள் மேல் தீ வைத்துக் கொண்டார். கரோலிஸ் குடிபோதையில் இருந்தபொழுதே தனக்குத் தீ வைத்துக்கொண்டார் எனத் தெரியவருகிறது. எரிகாயங்களுடன்கரோலிஸ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு வெள்ளம்பிட்டிப் பொலிசாரால் எடுத்துச் செல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சங்கீத வித்வத்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

அகில இலங்கை சங்கீத வித்வத்சபையின் பொதுக்கூட்டம் நல்லூர் கந்தகோட்டத்தில் பிரம்மஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் தலைமையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. காரியதரிசி அறிக்கையை வாசித்த பின் தனாதிகாரி 1964-ம் ஆண்டு வரவுசெலவு அறிக்கையை சமர்ப்பித்தார். சபை இவை அங்கீகரித்தபின்னர் புதிய வருடத்துக்கான நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்- ஸ்ரீ மணிபாகவதர், உபதலைவர்கள்- திருவாளர்கள்: எஸ். பரம்தில்லைராஜா, கே. வேலாயுதபிள்ளை, செயலாளர்கள்- திருவாளர்கள்- எஸ். கோவிந்தராஜா, ஏ. எஸ். நாராயணன், தனாதிகாரி திரு ஜி. சண்முகானந்தம்.

நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

வழமைபோல் இந்த வருடமும் ஆடிமாதத்தில் இசை விழாவை நடத்துவதென்று கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

---

## தோல்வியுற்ற அபேட்சகருக்கு கார் அன்பளிக்க முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

உடுப்பிட்டித்தொகுதி மக்கள் சார்பில் உடுப்பிட்டியில் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட திரு ஜெயக்கொடிக்கு ஒரு கார் அன்பளிப்பாக வாங்கிக்கொடுப்பதற்கு உடுப்பிட்டித் தமிழரசு வாலிபமுன்னணி தீர்மானித்துள்ளது.

REGAL - JAFFNA
NOW SHOWING
Glenn Ford
in
ADVANCE
TO THE REAR
(Panavision)

## கட்டாக்காலி மாடுகள் தொல்லை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டாக்காலி மாடுகளால் விவசாயிகளுக்கும் தோட்டப் பயிர்ச் செய்கையாளருக்கும் ஏற்படும் கஷ்டங்கள் குறித்து நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழு கூட்டத்தில் எம். பி.க்கள் சிலர் தெரிவித்தனர். கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தீவுப்பகுதியில் தான் அதிகம் என்றும் கூறப்பட்டது.

கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும்படி விவசாயக் குழுக்களுக்கு உத்தரவிடுவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். விவசாயக் குழுக்கள் மாடுகளைப் பிடித்தால் மாட்டுச் சொந்தக்காரர்கள் அதிக தொகை செலுத்தியே மாடுகளைத் திருப்பிப் பெறவேண்டியிருக்குமாம்.

---

## சிரமதான இயக்கம்

பருத்தித்துறை, புதன்

புலோலி கிழக்கு கிராமசேவகர் பிரிவில் ஆரம்பமான இரண்டாவது சிரமதானப் பணி தொடர்ந்து எட்டாவது தினமாக நேற்று நடைபெற்றது.

சுமார் இரண்டு மைல் நீளமான ரஸ்தா சீரமைப்பு வேலையில் எட்டு நாட்களிலும் 500 பேர்வரை ஈடுபட்டு சுமார் 3000 ரூபா மதிப்பிடக்கூடிய வேலை செய்திருப்பதாகக் கருதப்படுகிறது.

மேலும் ஒரு வாரம் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இச்சிரமதானப் பணியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் பலரும் புலோலி கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கத் தொண்டர்களுமாக 60 பேர் வரை நேற்றுக் கலந்துகொண்டனர்.

சிரமதானத் தொண்டர்கட்கு தாகசாந்தி, உணவு வசதிகட்கு காரியாதிகாரி வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்.

## எம். பி. க்களின் சொத்து வெளியிடுதல்

### மசோதா விரைவில் கொண்டுவரப்படும்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்கள் சொத்துவிபரம் தெரிவிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை அமுல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நீதி மந்திரி திரு. ஏ. எப். விஜயமானே கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி தனது அமைச்சு தற்பொழுது ஆராய்ந்துகொண்டிருக்கிறதென்றும், சட்டப் பிரச்னைகள் சில தீர்க்கப்பட்ட பின்னர் தீர்மானம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்றும் மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

---

## தொடர்ந்து போராட தயாரயிருக்கவேண்டும்

யாழ்ப்பாணம், புதன்

கடந்த திங்கட்கிழமை மாலை ஐந்து மணிக்கு நல்லூர் தமிழரசு வாலிப முன்னணி வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. 1952-ம் ஆண்டு தமிழரசுக்கட்சி தோல்வியடைந்தபோதும் தனது கொள்கையிலிருந்தும் விலகாது உறுதியாகத் தொடர்ந்து போராடியதால் இன்று இவ்வளவு வளர்ச்சியடைந்துள்ளது. வருங்காலத்தை வளமாக்கும் வாலிபர்கள் நாட்டில் நம்சுதந்திரத்தை மீட்பதற்கு தொடர்ந்து போராடத் தயாராக இருக்க வேண்டும்' என்று வடடுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அமிர்தலிங்கம் பேசும்போது குறிப்பிட்டார். நல்லூர் தொகுதி அபேட்சகர் டாக்டர் நாகநாதன் பேசும்போது, 'இந்தவிசின் சுதந்திரத்தைப் பெறுவதற்கு இளைஞர்களே அதிகம் பாடுபட்டனர். நமது இளைஞர்களின் உள்ளத்திலும் சுதந்திர தாகம் ஊற்றெடுக்கவேண்டும். சத்திரசிகிச்சை செய்வதற்காக லண்டன் செல்லவேண்டியிருக்கிறது. சத்திரச்சிகிச்சை மூலம் குணமடைந்து எனது சேவையைத் தொடர்ந்து பலகாலம் தமிழ் மக்களுக்குச் செய்வேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு' என்று கூறினார். திருமதி அமிர்தலிங்கமும் மற்றும் பலரும் பேசினர்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் மு ஆலாலசுந்தரம் உபதலைவர் மு இரத்தினசிங்கம், செயலாளர் க தியாகராசா, உதவிச்செயலாளர் பொ அருமைநாயகம், தனாதிகாரி மு பழனியப்பன், உபதனாதிகாரி சி சிவஞானம், 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது

---

## நினைவற்ற நிலையில் 6 ஆண்டுகள்

லண்டன், ஏப்ரல் 27

ஒரு கார் விபத்தில் சிக்கியதைத் தொடர்ந்து 6 ஆண்டுகளாகச் செயலற்று ஏறக்குறைய நினைவற்ற நிலையில் கிடந்த ஒரு சிறுவன் சமீபத்தில் இறந்தான்,

அச்சிறுவனின் பெயர் மால்கம்பீட் பக்கிங்ஹாம் ஷயரில் ஐவரைப் என்னுமிடத்தில் 1958 மே மாதத்தில் அவன்மீது ஒரு கார் மோதியதால் அவனுக்கு இந்த நிலை ஏற்பட்டது. அப்போது அவனுக்கு 4 வயது. இறந்தபோது அவனுக்கு 11 வயது.

---

சுன்னாகம், புதன்

கட்டுவாரம் சுன்னாக மக்களால் உடுவில் எம்.பி. திரு வி. தருமலிங்கத்திற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு கு. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் கிளிநொச்சி எம் பி. திரு கா. பொ. இரத்தினம், கோப்பாய் ... ற்பின்னர் ஆகியோர் உட்படப் பலர் பேசினர்.

## "உரிமைகளைப் பெறவே நல்லுறவைப் பயன்படுத்த வேண்டும்"

### வரவேற்புக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி.

சாவகச்சேரி புதன்

"இப்பொழுது வடக்கு மாகாணத்தில் உள்ள எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் தேசிய அரசாங்கத்தின் அங்கத்தவர்களாக திகழ்கிறார்கள். ஆட்சியிலிருக்கிற அமைச்சர்களுக்கும், எங்களுக்குமிருக்கிற நல்லெண்ணத்தை நல்ல வகையில் பயன் படுத்தவேண்டியது பொதுமக்களின் முக்கிய கடமையாகும். இந்த நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை பெறுவதற்கும். திட்டமிட்டு எமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், ஒவ்வொரு தொகுதிக்குப் தேவையானவற்றை செய்வதற்கும் மாத்திரமே பயன் படுத்தவேண்டும்" என்று சாவகச்சேரி எம். பி. திரு வ. ந. நவரத்தினம் வரணியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

வரணிக்கிளை தமிழரசு வாலிப முன்னணியின் ஆதரவில் நடைபெற்ற இந்த வரவேற்புக் கூட்டத்திற்கு வரணிகிராமசபைத் தலைவர் திரு க. ஆறுமுகம் தலைமைவகித்தார்.

திரு நவரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:-

'எங்களது அரசியல் செல்வாக்கை நாம் தனிப்பட்டவர்களின் நன்மைக்காகவோ சொந்த நலனிற்காகவோ பயன்படுத்தினால் தமிழ்பேசும் மக்களும்' எமது தொகுதிக்கும் எம்மை பூரணமாக பயன்படுத்துகிற வாய்ப்பை இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும்"

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா பொ. இரத்தினம் பேசும்போது நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒற்றுமை அவசியமென வலியுறுத்தினார்.

காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் பேசுகையில் தமிழ்மக்கள் தமிழரசுக் கட்சிக்குக் காட்டிய ஏகோபித்த ஆதரவிற்கு என்றும் பங்கமின்றி நடந்துகொள்ளும் என்று உறுதியளித்தார்.

ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

இன்றையசூழ்நிலையில் தமிழினம் தங்களுடைய பிரச்சனைகள் முற்றாக தீர்த்துவிட்டன வென்று கருதக்கூடாது. எதற்கும் நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டியது அவசியம். இளைஞர்களின் கையில் தான் தமிழ்சமுதாயதின் வளமுள்ள யாழ்வின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. அவர்கள் தங்கள் கட்சியைக் கட்டிவளர்ப்பதிலும். மொழிப்பற்றைவளர்ப்பதிலும் தீவிரகவனம் செலுத்தவேண்டும்' கூட்டம் ஆரம்பமாவதற்கு முதல் திருவாளர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் வ. ந. நவரத்தினம். பண்டிதர் கா. பொ. இரத்தினம். வி. நவரத்தினம் ஆகியோர் சட்டிபுரம் அம்மன்கோவில் அருகாமையில் இருந்து கூட்டமைதானத்திற்கு ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டனர்.

---

## ஆனையிறவு தடையை நீக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

ஆனையிறவுக்கு அப்பால் வெங்காயத்தை கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி விவசாயிகளுக்கு உதவுவதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் வளம்படுத்துமாறு புலோலி மேற்கு கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையம் விவசாயமந்திரி திரு. எம். டி. பண்டா வுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளது.

தங்கள் கிராமத்திலுள்ள மக்கள் அனைவரும் விவசாயிகள் என்றும் இருந்து முன்னர் வருடமொன்றுக்கு மூன்று தடவை வெங்காயம் பயிர் செய்யப்பட்டதென்றும் வெங்காயத்தடை காரணமாக இப்பொழுது வருடத்தில் ஒரு முறையே வெங்காயத்தை பயிர்செய்கின்றனர் என்றும் அப்படியிருக்கும் தங்கள் வெங்காயத்தை விற்கமுடியாது பெரும் கஷ்டப்படுவதாகவும் இது இவ்விதமிருக்க வெளி நாட்டிலிருந்து வெங்காயம் இறக்குமதிசெய்யப்படுவதாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகள் நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க உதவுமுகமாக ஆனையிறவுத்தடை நீக்கத்தை உடனடியாக நீக்குமாறு மகஜர் கோருகிறது.


---

## 35 பேர் பலி

லண்டன், ஏப்ரல் 28

டொமினிக்கன் குடியரசில் கடற்படையினர் விமானப் படையினருடன் சேர்ந்து கிளர்ச்சிக்காரர்களைத் தாக்கினர். நேற்றை கைகலப்பில் 35 பேர் கொல்லப்பட்டனர். 80 பேர் காயமடைந்தனர்.

சிங்களி பிளாசா ராஜ்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (நீர்கொழும்பு)
நவா விஜயா மொடர்ன்
(கும்பனித்தெரு) (மட்டக்களப்பு) (பண்டாரவளை)
விஜிதா நீவொலி ஜூப்பிட்டர்
(ஹட்டன்) (நுவரேலியா) (குருநாகலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பாகிஸ்தான் எல்லைகள் அனைத்திலும் ஏராளமான படைகுவிப்பு

## அமைதியை ஏற்படுத்துமாறு இரு நாடுகளுக்கும் ஜனதிபதி ஜோன்ஸன் வேண்டுகோள்

### பியர்பேட் நிலைமை பற்றி இரு நாடுகளின் முரணுன அறிவிப்பு

கராச்சி, ஏப்ரல் 28

**கட்ச்-ரான் பகுதியிலுள்ள பியர்பேட் பாகிஸ்தான் ஆதிக்கத்திலிருப்பது மட்டுமின்றி இன்னும் அப்பாலுள்ள பிரதேசம் பாகிஸ்தானின் வசமே இருப்பதாயும், தாங்கள் பின்வாங்கியதாகக் கூறப்படுவது உண்மைக்கு மாறுனது என்றும் கராச்சியில் வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் கூறினுர்.**

**ஆனல் பாகிஸ்தான் பியர்பேட்டிலிருந்து பெருஞ் சேதத்துடன் விரட்டியடிக்கப்பட்டுவிட்டதென்றும் பியர்பேட் தன்வசமிருப்பதாக அது கூறுவது தவறு என்றும் இந்தியா அறிவித்திருக்கிறது.**

கடந்த திங்கட்கிழமை இல்கு நடைபெற்ற கைகலப்பில் 140 பாகிஸ்தானியர் கொலைப்பட்டதாயும், 6 இந்தியர் மாண்டதாயும் இதுவரை 800 பாகிஸ்தானியருக்கும், 65 இந்தியருக்கும் சேதம் ஏற்பட்டதென்றும் டில்லி செய்திகள் கூறின.

### லொறிகள் நாசம்

கட்ச்-சிந்து எல்லையின் பல பகுதிகளிலும் பாகிஸ்தான் படைகளை ஏராளமாகக் குவித்து வருகிறது. சேற்று இந்தியத் துருப்புக்கள் பாகிஸ்தான் ராணுவ சப்ளை மீது பீரங்கிப் பிரயோகம் செய்ததில் 8 லொறிகள் அழிந்தன.

### பல எல்லைகளில் படை குவிப்பு

காஷ்மீர் எல்லைக்கப்பாலும் பாகிஸ்தான் துருப்புக்கள் விறுவிறுப்பாய் இருப்பதாகக் கூறப்படுகிறது. புதுப்படைபலத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கிறுர்கள்.

மேற்கு வங்காளம்-கிழக்கு பாகிஸ்தான் எல்லையிலும், திரிபுரா எல்லையிலும் பாகிஸ்தானிய துருப்புக்கள் திரண்டிருக்கிறுர்கள்.

### பிரிட்டன் கவலை

டில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் நேற்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து இந்தோ-பாகிஸ்தான் எல்லை நிலைமை பற்றித் தனது அரசாங்கத்தின் கவலையைத் தெரிவித்தார்.

இதேபோல்கராச்சியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரும் பாகிஸ்தான் அரசாங்கத்திடம் பிரிட்டனின் கவலையைத் தெரிவித்திருக்கிறுர்.

பியர்பேட மீது பாகிஸ்தான் 5 தினங்களாக பீரங்கிப் பிரயோகம் செய்தது.

### பிரதமர், நந்தா வேண்டுகோள்

பாகிஸ்தான் தாக்குதலைச் சமாளிக்கும் பொருட்டு மக்கள் தங்களிடையே பூசல்களையும், பிணக்குகளையும் விட்டுவிட வேண்டும் என உள்நாட்டுமந்திரி திரு. நந்தா கேட்டுக் கொண்டிருக்கிறுர்

தேசத்துக்கு இப்போது ஒரு சோதனை ஏற்பட்டுள்ளதென்றும் அதற்காக மக்கள் தியாகம் செய்ய வேண்டும் என்றும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைச் சொல்ல முடியாது என்றும் திரு. நந்தா கூறினுர்.

### முஸ்லிம்களைக் காப்போம்

வகுப்புக் கலகத்தையும் குழப்பத்தையும் தூண்டிவிடுபவர்கள்மீது சிறிதும் கருணை காட்டமாட்டோம் ஒவ்வொரு முஸ்லிமின் உயிரையும் காப்பாற்ற அரசாங்கம் முழுவலிமையையும் உபயோகிக்கும். இச்சமயத்தில் நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என எவரும் கூறமாட்டார்கள்" என்றும் திரு. நந்தா குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. சாஸ்திரி விடுத்துள்ள செய்தியில் புதிய ஆபத்தை உறுதியுடன் எதிர்த்து நிற்கும்படி கேட்டுக்கொண்டார். இந்தியாவின் பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி இரண்டையும் புறக்கணிக்க முடியாது என்றும் அவர் கூறினுர்.

தேசத்தின் நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க உதவுவதில் பெண்களும் பெரும் பங்கு வகிக்க முடியும் என ஸ்ரீமதி இந்திராகாந்தி ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

### அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு

ராஜஸ்தான்-பாகிஸ்தான் எல்லை நிலைமைபற்றி ராஜ்ய மந்திரி சபை நேற்று ஆராய்ந்தது. எல்லையைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பஞ்சாப் சட்டசபையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் எல்லையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒத்துழைப்பதாக உறுதியளித்தன.

### கம்யூனிஸ்ட் கண்டனம்

"பாகிஸ்தானின் தாக்குதல் நாட்டில் அபாயத்தை அதிகரித்திருக்கிறது எனக் கம்யூனிஸ்ட் கமிட்டி அறிவித்திருக்கிறது.

கட்ச் எல்லையில் நேற்று ஓரளவு அமைதி ஏற்பட்டிருந்தது.

### பாகிஸ்தான் அறிவிப்பு

பியர்பேட்டில் இந்தியத் துருப்புக்கள் குழப்பமடைந்து பின் வாங்கியதாயும் ஒரு பிரிகேட் பாகிஸ்தான் துருப்புக்களிடம் சரணுகதி அடைந்துவிட்டதாயும் கராச்சிரேடியோ அறிவித்தது.

கிழக்கு பஞ்சாபில் இந்தியா தன் துருப்புக்களைக் குவித்து வருவதாயும் அகழிகளும் பாதுகாப்புக் குழிகளும் அமைத்து வருவதாயும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியது.

### ஜோன்ஸன் வேண்டுகோள்

ஜனதிபதி ஜோன்ஸன் இந்திய எல்லை நிலைமைபற்றித் தனது வெளிநாட்டு மந்திரி ரஸ்குடன் பேசினர்.

ஜனதிபதி பின்பு விடுத்த அறிக்கையில் இரு நாடுகளுடனும் தாம் தொடர்பு கொண்டிருப்பதாயும் இப்பகுதியில் அமைதியைப் பாதுகாக்க இரு நாடுகளும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பாகிஸ்தான் வசமுள்ள அஸாத் காஷ்மீர் தலைவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், வெளிநாட்டு ஆயுதஉதவி காரணமாக இந்தியா எல்லையில் பாரதூரமான சம்பவங்களைத் தோற்றுவித்திருப்பதாய்க் கூறினுர்.

### 1 லட்சம் மலைவாசிகள் போரிடுவர்

இதற்கிடையில் ஒரு லட்சம் மலைவாசிகள் கட்ச் பகுதியில் பாகிஸ்தானுடன் சேர்ந்து சண்டையிட தமது பெயர்களைக் கொடுத்திருக்கின்றனர்.

அறிவிக்கப்பட்டது.

எல்லையில் படைகள் குவிக்கப்பட்டிருப்பதை அடுத்து நேற்று பம்பாயில் பங்குமார்க்கெட் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

ஐ. அ குடியரசு:

## தூதரைத் திருப்ப அழைக்கும்

கெய்ரோ, ஏப்ரல் 28

பேர்னிலுள்ள தனது தூதரைத் திருப்பி அழைத்துக் கொள்வதென ஐக்கிய அராபியக் குடியரசு தீர்மானித்திருக்கிறது. பேர்னிலுள்ள ஐ. அ. குடியரசு, ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் தூதராலயங்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது

## இந்திய வரலாறு பற்றி ரஷ்ய ஆராய்ச்சி நூல்

மாஸ்கோ, ஏப்ரல் 28

இந்திய வரலாற்றைப் பற்றி 4 தொகுதிகள் கொண்ட நூல் ஒன்றை சோவியத்யூனியன் வெளியிட்டு வருவதாம் டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பூர்வீக காலந்தொட்டு இன்றுவரை உள்ள இந்திய சரித்திரத்தை சோவியத் நிபுணர்கள் கோஷ்டி தயாரித்து வருவதாயும் இந்தத் தொகுப்புவேலையில் சோவியத் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளதாயும் 1966ல் இவ்வேலை பூர்த்தி படையுமென்றும் அறிவிக்கப்பட்டது.

பிரபல சோவியத் வரலாற்றுத்துறை நிபுணரான திரு எரிக் கோமரோவ் இத்தகவலை நிருபர்களிடம் அறிவித்தார்.

பீகார்:

## பல்கலைக்கழகம் மூடப்பட்டது

அலிகார், ஏப்ரல் 28

அலிகார் பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டிருக்கிறது. ஒரு டசன் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறுர்கள், உபவேந்தரையும், மற்றும் பல அதிகாரிகளையும் மாணவர்கள் தாக்கிக் காயம் விளைவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம்செய்தது ஞாபகமிருக்கும்.

## "எங்களுக்குத் தெரியாது"

வாஷிங்டன், ஏப்ரல் 28

இந்தோ-பாகிஸ்தான் எல்லையிலுள்ள கட்ச் ரான் எல்லையில் அமெரிக்க ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டனவா என்பது தமக்குத் தெரியாதென ராஜாங்க இலாகா அறிவித்திருக்கிறது. இதுசம்பந்தமாகத் தகவல்கோரப்பட்டிருக்கிறதென பத்திரிகைக் காரியதரிசி திரு. ராபர்ட் மெக்லோஸ்கி கூறினர்.

## வடவியட்னும் ஆக்கிரமிப்பு நின்றுல் குண்டுவீச்சு நிற்கும்

### நிபந்தனையற்ற பேச்சுநடத்த திரு. ஜோன்ஸன் மீண்டும் வலியுறுத்து

சைகோன், ஏப்ரல் 28

வட வியட்னுமில் அமெரிக்க விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் 6 ராணுவ நிலையங்களுக்கும், 2 பாலங்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

ஐந்து அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாய் வட வியட்னும் கூறியது.

இதற்கிடையில் தென் வியட்னுமுக்குவரும் கடல் பாதையில் எல்லா கப்பல்களையும் 12 மைலுக்கப்பால் சோதனையிட அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. வியட்காங்கியருக்கு ஆயுதங்கள் வராமல் தடுப்பதே இதன் உத்தேசம்,

வியட்னும் பிரச்னைபற்றி சம்பந்தப்பட்ட எந்த அரசாங்கத்துடனும் நிபந்தனையற்ற பேச்சு நடத்த அமெரிக்கா தயாராய் இருக்கிறது என ஜனதிபதி ஜோன்ஸன் மீண்டும் அறிவித்திருக்கிறுர், அதே சமயம் வியட்னுமில் அமெரிக்கா உறுதியுடன் போராடும் என்றும் அவர் அறிவித்தார். வட வியட்னுமின் ஆக்கிரமிப்பு நிற்கும்போது, அமெரிக்கா தன் குண்டு வீச்சையும் நிறுத்தும் என ஜனதிபதி மேலும் கூறினுர். நிருபர்கள் மகாநாட்டில் அவர் பேசினுர்.

இந்தியாவில் முன்பு அமெரிக்கத் தூதராய் இருந்த திரு. கல்பிரய்த், வட வியட்னுமில் அமெரிக்க குண்டுவீச்சு நிறுத்தப்படவேண்டும் என்றும், இதனுல் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் நண்பர்களை அமெரிக்கா இழந்துவருகிறது என்றும் கூறியிருக்கிறுர்.

## அப்துல்லா ஏமாற்றி விட்டார்: லோகியா பிரலாபம்

ஜலந்தர், ஏப், 28

விடுதலையடைந்தபின் தவறுன வழியில் செல்ல மூற்பட்ட ஷேக் அப்துல்லா தமது நம்பிக்கைகளையெல்லாம் தகர்த்துவிட்டதாக சம்யுக்த சோஷலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம்மனேகர் லோகியா கூறினுர்

ஹோஷியன்பூர் செல்லும் வழியில் ஜலந்தரில் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

தமது ஏமாற்றம் குறித்து அவர் கூறியதாவது:-

"ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை வலுப்படுத்தவும், இந்தியா-பாகிஸ்தானிடையே நல்லுறவை வளர்க்கவும் பெருதவியாக இருப்பார் என எதிர்பார்த்து ஷேக் அப்துல்லாவின் விடுதலைக்கு முதலில் குரல் கொடுத்தவன் நான்தான். நான் எதிர்பார்த்ததற்கு நேர்மாறுகத் தகாத வழியில் அவர் செல்ல முற்பட்டிருப்பது துரதிருஷ்டவசமாகும்' என்றும் லோகியா கூறினுர்.

## அதிக விலைக்கு பொருட்களை வாங்கமாட்டோம்

### பிரிட்டிஷ் பெண்களின் இயக்கம்

லண்டன், ஏப்ரல் 28

விலைவாசி உயர்வை எதிர்த்து 6000 பிரிட்டிஷ் மாதர்கள் அமைதிப் புரட்சி நடத்தி வருவதாக இங்கிலாந்தின் வடபகுதியைச் சேர்ந்த ஸ்ரீமதி ஷீலா மாண்ட்கோமரி கூறினுர்.

விலைவாசிகள் உயர்ந்திருப்பதன் காரணமாக ஒருமாத காலத்துக்கு பிஸ்கோத்துகளை வாங்காமலிருக்கும்படி இந்தப் பெண், தன் அண்டை அயலில் குடித்தனம் நடத்தும் 9 பேர்களைத் தூண்டினுர். இந்தப் பகிஷ்கரிப்பு இயக்கத்தில் மற்ற மாதர்களும் படிப்படியாகச் சேர்ந்துவிட்டனர். ஏற்கனவே அவர்கள் சில குறிப்பிட்ட பொருட்களை வாங்குவதில்லையென தங்களுக்குத் தாங்களே தடைவிதித்துக்கொண்டுவிட்டார்கள்.

இப்போது பிரிட்டனில் இத்தகைய பகிஷ்கார கோஷ்டிகள் 280 இயங்கிவருகின்றன.

சில பொருட்களை ஒருமாத காலத்திற்கு வாங்காமல் நிறுத்திவைப்பதன்மூலம் விலைவாசிகளின் அக்கிரம உயர்வைத் தடுப்பதில் மாதருக்குள்ள வலிமையை நிரூபிப்பதே எங்களது லட்சியம்" என ஸ்ரீமதி மாண்ட்கோமரி கூறினுர்.

இந்த இயக்கத்திற்கு நல்ல ஆதரவு கிடைத்துவருவதாயும் அவர் கூறினுர்.

## பாட்னவில் தென்னிந்திய வரலாறு

பாட்ன, ஏப் 28

தென்னிந்திய வரலாற்றை, பட்டமேல் படிப்பு வகுப்பில் கற்றுத்தரவும், அதுபற்றி ஆராய்ச்சி நடத்தவும் பாட்ன பல்கலைக் கழகம் கூறிய திட்டத்தை பீகார் மாநில பல்கலைக்கழகக் குழு அங்கீகரித்திருக்கிறது.

தென்னிந்தியாவின் பண்பாட்டு வரலாறு, ஆட்சியமைப்பு, கல்வெட்டு முதலியன அதில் அடங்கியுள்ளன. பீகார் மாணவர்களுக்கு தென்னிந்தியாவின் வரலாற்றையும், பண்பாட்டையும் உணர்த்துவதும் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதும் அதன் நோக்கமாகும்.

## திருச்சி ஜங்ஷனுக்கு ரூ. 1000 பரிசு

திருச்சி, ஏப். 28

தென்னிந்திய ரயில்வேயின் பெரிய ரயில் நிலையங்களுக்கிடையே மிகவும் சுத்தமாக விளங்கிய திருச்சி ஜங்ஷனுக்கு ரூ. 1000 பரி வழங்கப்பட்டது.

## மகாத்மா வாழ்ந்த இடங்கள்

புதுடில்லி, ஏப். 28

மகாத்மா காந்தியின் வாழ்க்கையுடன் தொடர்புகொண்ட இடங்கள் உல்லாசப் பிரயாண கேந்திரங்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# கள்ள நோட்டு வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

கள்ளநோட்டு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி மன்னாரைச் சேர்ந்த மு. முகமத் ஹனிபா மீது வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ஜூரிசபையினர் எதிரி சுற்றவாளியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் திரு வி. மாணிக்கவாசகர் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 1963-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ம் திகதி மன்னாரைச் சேர்ந்த மு. முகமத் ஹனிபா என்பவர் L/ 100-80835 இலக்கங்களுள்ள மூன்று பத்து ரூபா கள்ள நோட்டுக்கள் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் திரு. ஏ சம்பந்தன் திரு. எஸ பாலகுமாரின் உதவியுடனும், திரு வி. சிவசுப்பிரமணியத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர். முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஜி. பி. எஸ. டி' சில்வா வழக்கை நடத்தினர்.

சுங்கப் பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு பத்மநாதன், மத்திய வங்கியைச் சேர்ந்த செக்டர் பிரேமதாசா, பொலிஸ் உத்தியோகத்தர்கள் டேவிட சில்வா, பியசேன ஆகியோர் சாட்சியமளித்தனர்.

"ஒருவர் கள்ளநோட்டு வைத்திருப்பதால் அவரைக் குற்றவாளியென்று சொல்ல முடியாது, யாராவது அவரிடம் அக்கள்ளநோட்டுக்களைக் கொடுத்திருக்கலாம்; அவர் தெரியாமல்வாங்கியிருக்கலாம். ஆனல் ஒருவர் கள்ளநோட்டுக்களை மாற்ற முயற்சித்திருந்தாலோ அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாலோ அவர் குற்றவாளியெனக் கணிக்கப்படலாம்" என்று நீதியரசர் தமது தீர்ப்பின்போது குறிப்பிட்டார்.

## கணேசபுரம் கொலைவழக்கு

சாவகச்சேரி, புதன்

கணேசபுரம் கொலைவழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜெபேர்ட்சில்வா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது கிளிநொச்சி பொலிஸ்சார்ஜன்ட் சின்னையாவும், சார்ஜன்ட் நடராசாவும் சாட்சியமளித்தனர், எதிரிகளின் வழக்கறிஞர் சார்ஜன்ட் நடராசாவை நீண்டநேரம் குறுக்குவிசாரணை செய்தார், பின்னர் நீதிபதி வழக்கை அடுத்தமாதம் மூன்றும் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றையதினம் மிகுதிச் சாட்சிகளின் விசாரணை முடிவடைந்தபின் எதிரிகளின் வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்துவார், இவ்வழக்கில் கணேசபுரத்தில் ஜேக்கப் என்பவரைக் கொலைசெய்ததாக அதே ஊரைச் சேர்ந்த தியாகராசா, சின்னையா அல்லது கருப்பையா இருவர் மீதும் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் திரு வி. செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே. வி எஸ. சண்முகநாதன் ஆஜரானர்.

## "கூட்டரசாங்கம் ஏமாற்றவில்லை"

உடுப்பிட்டி, புதன்

"கூட்டரசாங்கம் ஏனைய அரசாங்கங்கள் போன்று தமிழ் மக்களை ஏமாற்றியது கிடையாது. கூட்டரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களை ஒரு சில மாதங்களாவது பொறுத்திருந்து பார்க்கமுடியாத கட்சியினர் அத்தனைபேரும் சேர்ந்து 'தேசிய அரசாங்க' மென்று கூறப்படும் ஏழரைக் கட்சிகளை நம்பித் தமிழ் மக்களைச் சிலகாலம் பொறுத்திருக்கும்படி கேட்பது விந்தையாக இருக்கிறது"

இவ்வாறு டாக்டர் எஸ எஸ. மாசிலாமணி வதிரி சமசமாஜ வாலிபர்சழக விஷேட நிர்வாகசபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இட்துசாரி ஐக்கிய மேதின விழாவில் அதிகமானோர் செஞ்சட்டைகள் அணிந்து சமுகமளிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. செயலாளர் திரு. எஸ. சமலநாதன் நன்றிகூறினர்.

## மகாபாரத கதாப்பிரசங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பஞ்சரதத் திருப்பணியை முன்னிட்டு வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை சம்பூர்ண மகாபாரத சங்கீதகதாப்பிரசங்கம் மேற்படி தேவஸ்தான வித்துவான வண்ணை ஸ்ரீ சி. எஸ. எஸ. மணிபாகவதரால் நிகழ்த்தப்படும்.

வருகிற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பெரும்பாக காரியாதிகாரி திரு. செ' சிவஞானம் தலைமையில் இத்தொடரின் முதலாவது பிரசங்கம் ஆரம்பமாகும்,

## ரஷ்யாமீது சீனு கண்டனம்

பீகிங், ஏப். 28

வியட்நாம் விஷயத்தில் ரஷ்யா அமெரிக்காவின் பக்கம் சாய்ந்துவருகிறது என சீனு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

முன்னுள் பிரதமர் குருஷ்சேவின் கொள்கைகளையே தற்போதைய ரஷ்ய ஆட்சியாளர்களும் கடைப்பிடித்து வருவதாயும், இதன் காரணமாக சீனுவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே பிளவு மேலும் மேலும் வளர்ந்து வருவதாயும் கூறப்பட்டிருக்கிறது. ஆனல் அமெரிக்காவுடன் ரஷ்யா என்னதான் ஒத்துழைத்தபோதிலும் வியட்னும் போரீடிக்கும் என சீனு கூறியிருக்கிறது.

# விவசாயிகளின் கடனை உடனடியாக அறவிடுவதில்லை

## வவனியா மாவட்ட இணைப்புக் கமிட்டியின் தீர்மானம்

வவுனியா, புதன்

வவுனியா கச்சேரியில் நேற்றுமுன் தினம் நடைபெற்றவொரு மகாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட சூருவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களின் எதிர்கால திட்டம் பற்றி விளக்கமாக ஆராயப் பட்டது.

இந்த மகாநாட்டுக்கு வவுனியா அரசாங்க அதிபர் தலைமை வகித்தார்.

சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பஞ்சநிவாரண வேலைகள் வனங்க துரிதநடவடிக்கைகள் மேற்கொள்ளுவதென்று இந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

வவனியா மாவட்டத்தின் கமத்தொழிற் சேவை உதவி கமிஷனர் பகுதியிலுள்ள 140 குளங்களைத் திருத்தவேண்டுமென்றும் திருத்த வேலைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது:

கஷ்டமுறும்மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் முகமாக மண்வேலைத் திட்டமொன்றை ஆரம்பிப்பதென்றும் முடிவுசெய்யப் பட்டுள்ளது.

வவுனியாவில் ஆரம்பத்தில் ஏற்பட்ட வரட்சியினலும் அதனைத்தொடர்ந்து வந்த சூருவளியினலும் பின்னர் ஏற்பட்ட கடுமையான வரட்சியினலும் விவசாயிகள் மெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், விவசாயமும் மோசமானநிலையை அடைந்துவிட்டது. இதன் விளைவாக பலநோக்குக்கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கடனுதவி பெற்ற விவசாயிகள் தங்களது கடன்தொகையைத் திருப்பிக் கொடுக்க முடியாதிருக்கிறர்கள் ஆகையினல் இவர்களிடமிருந்து கடன் தொகையை உடனடியாக அறவிடாது பாதுகாப்பளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், இதனுடன் இவர்களுக்கு நிலவரி, நீர்வரி அறவிடுவதை முற்ருக நிறுத்தவேண்டும், என்று கோரும் பிரேரணை இம்மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டது,

விவசாயச் சங்கங்களிலிருந்து 1964-ல் பெறற கடனை இரண்டு, மூன்று வருடங்களுக்கு தவணை கொடுத்து அறவிட வேண்டுமென்று கோரும் மற்றுமொரு பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

## ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வெங்காயம் கொண்டுவர அனுமதி வழங்குவதென்று இக்கூட்டத்தில் பின்னர் தீர்மானிக்கப்பட்டது.

### கடுகதி புகையிரதங்கள்

புளியங்குளத்தில் உத்தரதேவி கடுகதிப் புகையிரதம் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரும் பிரேரணையும் கூட்டத்தில் நிறைவேறியது. புளியங்குளத்தில் கடுகதிப் புகைவித்தங்கள் நிறுத்தப் படாததால் இங்குள்ள விவசாயிகள் அதிகம் கஷ்டப்படுகின்றனர் என்றும் இதன் காரணமாக அவர்கள் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறதென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### பஸ்சேவை

புளியங்குளத்திலிருந்து காலையும் மாலையும் வவனியா, ஓமந்தை ஆகிய இடங்களுக்கு பாடசாலை பஸ்சேவை விடப்படவேண்டுமென்று கோரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. இந்த பாடசாலை பஸ்சேவைகளை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு அனுமதியும் இ... போக்குவரத்து அ... தெரிவித்துள்ளார்.

## மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' சூருவளி நிதிச் சபையினர் ஆரம்பித்தமாதந்த உதவித் திட்டத்திற்கு தெமட்டக்கொடையைச் சேர்ந்த ஓர் அன்பர் ஏப்ரல் மாதத்திற்கான 25 ரூபாவை அனுப்பி வைத்துள்ளார்.

## மர உச்சியிலே..,

வவுனியா' புதன்

"துணைக்குப்போனலும்பிணைக்குப்போகாதே" என்பார்கள் பிணைக்குப்போன ஒருவர் தன் கண்முன் செல்லில் தானே தற்கொலை செய்ய முயற்சித்த சம்பவம் மீசாலை கிழக்கில் நடைபெற்றது.

தனது நண்பன் ஒருவருக்கு உதவவேண்டுமென்பதற்காக தனது உறவினர் ஒருவருக்கு சொந்தமான தாலிக்கொடியை வாங்கிக் கொடுத்தார், இந்த நபர் அடகுவைத்துவிட்டு திருப்பித்தருவதாகக் கூறித்தான் நபர் தாலிக்கொடியை வாங்கினர். பலமாதமாகியும் தாலிக்கொடி திருப்பித்தந்ததாக தெரியவில்லை; தாலிக்கொடி அடகு வைக்கப்படவில்லை விற்கப்பட்டுவிட்டதாக செய்தி கிடைத்தது இதைக் கேள்வியுற்ற குறிப்பிட்ட நபர் மாமரத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்ய முயற்சித்தார். முதல் முறையில் அவரின் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டு கயிறு அறுக்கப்பட்டது. ஆனல் அவரோ விடாப்பிடியாக அந்த மாமரத்தின் உச்சிக்கு ஏறிக்கொண்டு இறங்க மறுத்துவிட்டார் பலரும் வந்து இறங்கச் சொன்னர்கள்; அவர் மறுத்துவிட்டார் பொலிசார் வந்து பயமுறுத்தினர்கள், 50 அடி உயரமான மாமரத்தின் உச்சியில் நின்ற அவர் பொலிசாரையும் பொருட்படுத்தவில்லை, சுமார் 7 மணித்தியாலயங்கள் மர உச்சியில் இருந்த அவரை அவரது உறவினர் சமயோசிதமாக நடந்துகொண்டு இறங்குவித்தனர். எப்படி?...நண்பர் விற்றுவிட்ட தாலிக்கொடியைப் போல சகல விதத்திலும் ஒத்திருக்கும் ஒரு தாலிக்கொடியை கலத்திலிருந்துகொண்டு காட்டினர், "இதுதான் நண்பர் விற்றதாகக் கூறப்படும் தாலிக்கொடி" என்றனர். இறங்கினரா அவர்? இல்லை. கயிறென்றில் தாலிக்கொடியை கட்டி மரத்தில் எறிந்து கொடுத்தும் அதை பல நிமிடங்கள் உற்றுநோக்கியபின்னரே அவர் கீழே இறங்கிவந்தார். இறங்கிவந்ததும் சற்று மயக்கமடைந்தவராகக் காணப்பட்டார், மூளை அதிகமாக வேலை செய்த காரணம்தான்போலும்! அவரை இறங்கவைத்த 'விஷய'ம் அவருக்கு தெரியுமோ தெரியாது!

## மகாநாயக்கதேரோவுக்கு கொழும்பில் அலுவலகம்

கொழும்பு, வியாழன்

மகாநாயக்கதேரோவின் அலுவலகப்பாவிப்புக்கென கொழும்பில் ஒரு இல்லத்தை அவருக்கு ஒதுக்குவதென கல்வி மந்திரி ஐ. எம். ஆர். ஏ இரியகொலை முடிவுசெய்துளளார்.

மந்திரிகளைச் சந்தித்துத் தமது பிரச்னைகளைச் சொல்வதற்கு மந்திரிகளைப் பேட்டி காண்பதில் தாமதமேற்படாத வகையிலுமே இவ்வலுவலக இல்லம் மகாநாயக்கதேரோவுக்கு அமைத்துக்கொடுப்பதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## புராணபடனம்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவிலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை முதல் மாலைவரை திருவிளையாடல் புராணம் வாசிக்கப்படுகின்றது. அதைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் விசேஷபூஜைகளும் நடைபெறுகின்றன.

பம்பலப்பிட்டி, புதன்

அரசாங்க சிரேஷ்ட வாணிப அவதான நிலைய உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத்தில் மேலதிகமாக அநேக உத்தியோகத்தர்கள் இருக்கிறர்கள் என்றும் இதையொட்டி வேண்டிய விசாரணையை உடனடியாக நடாத்தும்படியும் விவசாய உணவுமந்திரி திரு. எம். டி. பண்டாரவை கேட்டுள்ளனர்.

## வாலிபமுன்னணி உத்தியோகஸ்தர்கள்

மாவிட்டபுரம், வியாழன்

தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் கிளையொன்று தெல்லிப்பளையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது, உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: இ. தனையசிங்கம், உபதலைவர்கள்: க. பொன்னையா, பொ. கோபாலகிருஷ்ணன், இணைச்செயலாளர்கள்: வி. பாக்கியநாதன், ந. ஜெகநாதன், தனுத்காரி. சி. அருணானந்தசிவம்.

## நாவற்குழிக் கிராமசபை

### கிராமசபை உத்தியோகத்தர் பதவி விண்ணப்ப அறிவித்தல்

நாவற்குழிக் கிராமசபைக்கு கிராமசபை உத்தியோகத்தர் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் கீழ்க்காணும் தகைமைகள் உடையவர்களாக இருக்கவேண்டும்.

1. 18—22 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

2. கனிஷ்ட பாடசாலைத் தராதரபத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும்.

3. நற்குணமுடையோராக இருக்கவேண்டும்.

மேற்படி சேவையில் அனுபவம் உள்ளோருக்கு சலுகை அளிக்கப்படும்.

தெரிந்தெடுக்கப்படுவோருக்கு சம்பளம் 40/- ரூபாவும், வழக்கை, விசேட வழக்கைப்படியும் வழங்கப்படும்.

விண்ணப்பத்துடன் சமீபத்தில் பெற்றுக்கொண்ட நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டும், பிறப்புச் சாட்சிப் பத்திரம், கல்வித் தராதரப்பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அக்கிராசனர், கிரமசபை, நாவற்குழி என்ற விலாசத்திற்கு 5-5-65-ம் திகதிக்குமுன் அனுப்பப்படவேண்டும், காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன விண்ணப்பம் என்று எழுதப் பட்டிருக்கவேண்டும்.

க. தம்பிப்பிள்ளை,
அக்கிராசனர்,
கிராமசபை,

கிராமசபை அலுவலகம்,
தச்சன்தோப்பு,
கைதடி, 28-4-65 151

## மரண அறிவித்தல்

### க. செல்லத்துரை

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்தவரும் வெள்ளவத்தை சரஸ்வதி ஸ்டோர்ஸ் சொந்தக்காரருமான திரு. கந்தையா செல்லத்துரை அவர்கள காலமாகிவிட்டார். இவர் சனகம்மாவின் அருமைக் கணவரும், உதயசங்கரம், உதயகுமாரன், கருணநிதி, மனோகரன், செல்வரத்தினம் ஆகியோரின் அருமைத் தந்தையும் ஐ குமாரசுவாமியின் அருமை மாமனுமாவர். அன்னருடைய பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று நண்பகல் 12 மணியளவில் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

அறிவிப்பவர்: சி, மு. தம்பித்துரை, உரும்பராய்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில். 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org